162

கடவுள் துணை.

வழிநடையலங்கார

வாழி மாலிகை.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா, சிவகெங்கை
சமஸ்தானாதிபதி ஸ்ரீமது, ஹிரண்ய கெர்ப்பயாஜி
ரவிகுல முத்துவிஜய ரகுநாத மகாராஜ ராஜ ஸ்ரீ
கௌரிவல்லவ பூபதியாகிய ராஜமான்ய
துரைசிங்க மஹாராஜா அவர்கள்
சந்நிதானத்தில்

ஷை சிவகெங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த
இளையான்குடிமாநகர் செந்தமிழ் வித்வான்
ப. கா. செய்யிதப்துல்காதிரவர்களால்
பாடப்பெற்றது.

மதுரைநகர் முனிசிபல் இன்சினீயர்
... M. ஹௌத் அவர்கள்
பொருளுதவியால்

...ணிக்கம் பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது.

1926. [காப்பி—200.

Q7:417
N26.
18122

சிறப்புப்பாயிரம்.

இஃது

இந் நூலாசிரியர்க் காசிரியரும், மாஜி
ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டும், இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட்டு
போர்டு, சிவகங்கை டாலுக் போர்டுகளின்
மெம்பரும், மதுரைத் தமிழ்ச்சங்க
வித்வானுமாகிய

சாஹிப், பஹதூர்.

சோதுகுடி ஸ்ரீமத்

M. K. M. அப்துல்காதிறு நாவலர்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பூமலியும் புனத்தெயினர் குலமகளிர் தனித்தனியே
புகுந்து நாளும்
மாமலியுஞ் சிறுபிறையை வாணுதலுக் கிணைபொருத்தி
மகிழு மின்பத்
தேமலியுந் தமிழ்ப்பொதிய வரைவளமும் வைகைநதிச்
செழிப்புந் தெய்வப்
பாமலியு மிருமகளு மருவியிரு பொருளுமுயர்
பாண்டி நாட்டில் (1)

வான்கிடந்த கற்பகக்கா வளங்கிடந்த பொன்னகர்க்கு
மாண்பு காட்டும்
கான்கிடந்த தண்டலையின் கனித்தேனு மாலைநெரி
கரும்பின் றேனுந்
தேன்கிடந்த மலர்த்தேனுஞ் சேர்ந்துபல முகமாகத்
திரண்டு மீறி
ங்கிடந்த வயற்சாலி விளைவிக்குஞ் சிவகங்கை
வியன்மூதூரில் (2)

சங்கநிதி பதுமநிதி யகன்மணிசிந் தாமணியான்
றருவொப் பென்னச்
செங்கனக மழைபொழியும் வள்ளல்கண்மூ வெழுவர்களுஞ்
சேர்ந்து பாரில்
துங்கமிகு மோருருக்கொண் டவதரித்த தெனத்தோன்றித்
துரைகேண் பெச்ச
எங்கணும்வெண் குடைபரப்பி யன்பினுக்கோ ரிலக்கியமா
யினிது வாழ்வோன் (3)

பதிகாட்டும் பவுசுடையான் பன்னலமு மொருங்கமைந்த
பாக்ய வான்சீர்
மதிகாட்டு மணிக்குடையான் வணங்கார்கள் வலிக்குடை
வாவுங் காலின் [யான்
கதிகாட்டும் பரிக்குடையான் முரசதிருந் தலைக்கடையான்
கனக மேரு
நிதிகாட்டுந் தனமுடையான் சிவகங்கை சமஸ்தான
நிருபனம்மா
மாற்றலராங் கடாயானை மத்தகத்தைப் பிளந்தெழுந்து
வன்மை கூவிக்
கூற்றுவற்கு விருந்தளிக்குந் திறற்சிங்கக் குருளைநேர்
கோமான் மன்னர்
போற்றிசெயும் பொற்கழலான் பொறுமையினுங் கருணையி
புகழா லன்பால் னு
ஏற்றமிகுந் துரைசிங்க கௌரிவல்லவதேவ.

ராஜ ராஜன்

அன்னவன்றன் னருளுடி யருங்கலைமா னுடன் கூடி
யவனூர் மார்க்கப்

பன்னலங்கூ றிப்போந்து வாழிசொற்றுப் பரிசுபெற்ற
பான்மையாவும்
மன்னுவழி நடந்தோதும் வாழிமா லிகையென்ன
மதிக்கு மோர்நூல்
சொன்னயமும் பொருணயமு மொன்றியொன்று வெல்லு
றுதிபெற் றோங்க (6) [முயர்
கத்துகட லமுதஞ்சங் கடமுறநற் செவிக்கின்பக்
கனியக் காமன்
நத்துசிலைக் கன்னலுநாண் பொருந்தமொழி தொறு
நல்கத் தென்பாற் [மினிமை
சித்தனும்பா ரதியுமூடல் குறுகிரா வடக்கியுளக்
திகைக்கும் வண்ணம்
இத்தரையில் எல்லவருஞ் சொல்லவரும் படிதமிழால்
இசைந்தான் மன்னே (7)
அன்னவன்யா ரெனிலிளையான் குடிநகர்வாழ் சேரற்
கணியே யாக [புலவர்க்
மன்னுபுகழ் குணக்கல்வி வாய்மையறி வன்பூக
மாண்பு பெற்றோன்
பன்னுபல கலைதெளிந்து பசுந்தமிழ்நூல் பலசொற்றோன்
பாச்சொல் வண்மை
தன்னிலுயர் மதுரகவி செய்யிதப்துல் காதிறெனுந்
தமிழ்வல் லோனே (8)
பூமணக்குஞ் சிவகங்கைப் புரவலனறன் சீர்த்தியெலாம்
புதுமை யாக
நாமணக்கச் செவிமணக்க நல்லுலகெல் லாமணக்க
நடைச்சிறந் தாகப்
பாமணக்கு மலங்கார வாழிமா லிகையாகப்
பகர்ந்தான் ஞான
மேமணக்கு மதுரகவி செய்யிதப்துல் காதிறெனும்
இயற் சிம்மமே (9)

இளையான்குடி இயற்றமிழ் வித்வான்

ஜனாப் செ. அ. சீனியாபில் ராவுத்தர்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

---

1. சீதமதிக் குடைநிழற்றத் திகழரியா சனத்தமர்ந்து
செங்கோ லோச்சிப்
பூதலமுற் றினுமாசு புரிந்துசிவ சங்கைக்கர்
பொலிய வாழும்
மாதகைய மன்னர்புகழ் துரைசிங்க கௌரிவல்ல
வக்கோ மான்மேற்
பாதைநடை யலங்கார வாழிமா லிகையுவந்து
பகர்ந்தான் மன்றே

2. அன்னவனை யின்னவனென் றறைதருமுத் தமிழ்க்கடலை
யருந்தி நால்விற்
பன்னகவி பொழியுமுகில் பாவலவர்க் கதிபதிசௌ
பாக்ய வான்செம்
பொன்னலர்க ளுற்றமுடைத் தன்னருண மறிவொழுக்கம்
பூண்டோ னுறுங்
கன்னல்வன மலியிளசை நன்னகர்வாழ் செய்யிதுப்துல்
காதி றம்மா.

கடவுள் துணை.

வழிநடையலங்கார

வாழிமாலிகை.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பூமேவு செழுங்கமலப் புனற்றடஞ் சூழ்சிவகங்கா
புரியைக் காக்கும்
மாமேவு துரைசிங்க மகிபனெனுங் கௌரிவல்ல
வக்கோ மான்மேற்
பாமேவு வாழிமா லிகையொன்று வழிநடந்து
பகர்தற் கென்றும்
நாமேவு புகழ்க்குரிய நாயகனை யுளத்திருத்தி
நாடு வாமால்

அவையடக்கம்.

கணிகிடந்த புலவர்முனங் கற்றுணராத் தமியனியான்
கூறும் வாய்மை
மணிகிடந்த கடலொலிமுன் வாரிகுறை குடத்தொலியை
மானு மேனும்
பணிகிடந்த புவிபுரக்கும் பார்த்திபனாந் துரைசிங்கப்
பதிமீ தோதும்
அணிகிடந்த புகழ்மாலை யாதலினே தம்பொறுப்ப
ராய்ந்தோர் மன்னோ.

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ரூபகம்.

பல்லவி.

கண்மணி யேதிருப் பெண்மயி லேயெந்தன்
காதலி யேபெட்டி வாராய் சிவ
கங்காநகர் செங்கோல்புரி
சிங்காசன னெங்கோன் றுரை
சிங்கஞ் சமுகத்தின் னேராய் (கண்மணி)

அனுபல்லவி.

விண்மணி யென்ன விளங்கும் ரவிகுல
வீரகெம் பீரவொப் யாரவு தாரகல்
வண்மை வழங்கு முடையண பூபதி
மாயிற்கொரு சுடரொப்பென
வருநற்குரி சிலநத்தியே (கண்மணி)

சரணங்கள்.

1. முத்தமி ழோது முதல்வியே நான்மறை
மூலபி ராமியே வாடி உயர்
முச்சகம் போற்றுந் துரைச்சிங்க ராஜ
முகுந்தன் ஸமூகத்தை நாடிச் சென்று
பத்தி யுடன்வாழி மாலிகை யாம்பிர
பந்த மகிழ்வுடன் பாடி அந்தப்
பார்த்திப னைத்தினம் வாழ்த்தியே மங்களம்
பாடித் துதிப்போங் கொண்டாடி அவன்
நித்திய சோபன மூற்றுயர் வாழ்வொடு
நேச மனைமக்கள் சாஸ்வத மாகவே
சத்திய மேஜெய மென்றுசெங் கோன்முறை
தவறாத இயல்மேவிட
தவல்வேரமிறை யவன்மீதிசை (கண்மணி)

2. கார்முகி லன்ன கருங்குழன் மீது
　　கமழு மகிற்புகை யூட்டு　　அதிற்
கல்லிழைத்த ஜடைப் பில்லைய ராக்கொடி
　　கட்டியே நன்மலர் சூட்டு　　அம்பின்
கூர்விழி யிற்கரு மையெழு திப்பொடி
　　கோவை யிதழுறத் தீட்டு　　எந்தன்
கோதையே யுன்னிரு காதின் மணிபலுக்
　　கொத்து ஜிமிக்கியு மாட்டு　　வெகு
சீர்பெறு மூக்கிற் புலாக்குடன் பேசரி
சேர நவமணி யாரம் பதக்கமும்
ஏர்பெறு மோகன மாலை சரப்பணி
　　இசையக்கள　　மணிநற்பழ
　　ரசமொத்திடு　　பனுவற்செயும்　　(கண்மணி)

3. தங்க முடிநிகர் கொண்டையிலங்கச்
　　சரிகை ரவிக்கையைச் சேர்த்துக்　　கட்டிச்
சார்ந்தெழில் சூரிய காந்தி யெனும்பட்டுத்
　　தாவணி தன்னைமேற் போர்த்து　　சுப
மங்கள மாயிடை மீதணி சித்திர
　　வன்னப்பா வாடையைக் கோர்த்து　　அதில்
வாகுட னேமணி மேகலை பூட்டி
　　மகிழ்வையே யுன்கண்ணுற் பார்த்துக்　　கையிற்
கங்கண முங்கட கங்கை வளையிடு
காதலாய் நீயணி பாதசரந்தண்டை
மங்கையே காலாழி பீலியும் பூணுவாய்
　　மகிழ்வுற்றென　　திருகுற்றிடு
　　ஜகமெச்சிய　　வெழில்பெற்றனை　　(கண்மணி)

தசாங்கச் சிறப்பு.

திருவுற்றிலகு கந்த வரையிற் புகழ் மிகுந்து என்ற
காவடிச்சிந்து வர்ணமெட்டு

மலை.

1. மணிமுத் தொடுகவின்ற நவரத் தினமலிந்த
மகுடத் தினையணிந்த காவலன் மிகு
புகழுற்ற துரைசிங்க மாவலன் உயர்
வானுலாவிய பானிலாமதி
மானின் மீதரி பாயுமாமுடி
மலயப் பெயர்புனைந்த பூதரன் இந்த
உலகைத் தனிபுரந்த சீதரன்

நதி, நாடு

2. பணிலத் தொடைவளைந்த சிவனற் சிரமிருந்து
பரவிப் புடவிவந்த வைகையான் செறி
திரையப் பணைததும்பு பொய்கையான் திகழ்
பாணிமாமல ரூறு தேன்வயல்
பாயநீடிய கூழெலாம்வளர்
பழமைத் தமிழ்சிறந்த தேயனும் கொடை
மழையொத் துதவுசம்ப்ர தாயனும்.

நகர், மாலை, பரி.

3. அளகைப் பதியைவென்று சுவனத் தினைபொருந்தி
அணிமிக்க சிவகங்கை யூரினன் மன்னர்
பணியக் கழல்வழங்கு சீரினன் நிதம்
ஆசைமீறிய மாதர்லோசன
கீதமோடுறை தேனுமூசிடும்
அடவித் தவளமொன்று கோதையான் சுதை
நடனப் பரியிலூர்ந்து மேதையான்

யானை, கொடி, முரசம், ஆணை.

4. தளமுற் றுடனெதிர்ந்த பகைமைக்குழுவைவென்று
தரையிற் கட்டுமிழ்ந்த யானையான் கவி
கருடக் கொடிபரந்த சேனையான் விறல்

தானமோடுகல் யாணமாமுர
சாரவாரம ருதிவேழ்புவி
சலதித் திடருமண்டு மாணையான் பல
கலைகற் றிசைபயின்ற வீணையான்

முற்சிந்து (தொடர்ச்சி).

அன்னவன் சன்னிதி நண்ணிட வேவழிக்
காகும் பொருளெடுப் பாயே நம
தன்பருக் குங்கிளை நண்பருக் கும்பிர
யாண மெடுத்துரைப் பாயே இங்கு
நன்னய மாநிதி யன்ன மெளியரை
நாடிக் கொடுத்தருள் வாயே அறம்
நன்குண ருந்துறை சிங்க மகிப
னடத்துங் கோடைநிக ராயே எந்தன்
கன்னியே தாமத மென்ன சொல் வாயினிக்
காலம்வீ ணுகுவ தாலேசந்தோஷமாய்
உன்னி வழியிலென் பின்னே வருகுவாய்
உசிதத்தொடு நடவித்தரு
சசியொப்புறு வதனத்திரு (கண்மணி)

5. மானில மெல்லாம் புகழிலை யான்குடி
மாநகர் மிக்கசிங்காரம் இங்கு
மாட கூடமணி மேடையமர்ந்திடு
மாளிகை யோவலங்காரம் அதன்
மேனிலை நின்றுபந் தாடிய மாதரின்
வேடிக்கை பார்சற்று நேரம் பல
விந்தை புரிந்திடுஞ் சுந்தர வாலிபர்
வீதிகள் தோறுஞ்சஞ் சாரம் செழு
தீனி[illegible] கண்டு தெளிமுக லிங்களுந்
திக்கெலாம் போற்றுமிந் துக்களு மொற்றுமை
யானித மேயுற வாடி யொழுகுவார்

அதியுத்தம குணவித்தக
ரதியொத்தச ரசசித்திர (கண்மணி)

6. மாதே யழகிய வீதி கடந்து
வருகையி லேரியுங் கண்டோம் திரு
மாமறை வேதியர் நேமம் புரியு
மணிப்பள்ளி வாயின்று னின்றும் திகழ்
ஆதி பகவனை யோதி மனதினில்
அன்பொடு கீதங்கள் விண்டோம் இவண்
ஆடு மயில் குயில் பாடுந் துடவைக
ளங்குகண் டேகளி கொண்டோம் இன்னம்
சோதிமி னுருவின் மேதையுங் கண்டனம்
தோகையே தென்புற மேகினோம் பாதையிற்
சீத மரைமலர் வீசுஞ் சிறுமடை
தெரிசித்தனை வளைநத்துகள்
சொரிமுத்துறு பழனத்தையும் (கண்மணி)

7. சுந்தர மேயிதோ தோணு தலங்காரத்
தோப்பினைப் பாரடி மாதே அதன்
சுற்று மதிளகத் துற்றம ரங்களைச்
சொல்லவென் றால்முடி யாதே கருங்
கந்தரம் போற்கொடை தந்தெளி யோர்களைக்
காத்தருள் செய்குண சாதே ஆதி
ஊக்க னருள்பெறுஞ் சர்க்கரை யம்பல
வாணன்கட் டுங்கிண றீதே இங்கு
சந்திரன் றன்னைத் தடவுதல் போன்முடி
தாவுஞ் சவுக்கையின் மேவியி ருந்தனஞ்
செந்திரு வேஜலஞ் சேர்ந்திப் பருகிடத்
திகழ்யொற்பதி பமுதத்தினு
மிகநற்சுவை யிதிலுற்றது (கண்மணி)

8. நீள வழிநடந் தேகவென் றால்வெகு
    நேரங் கழியுமிப் போதே   இதோ
நேரில் வருமோட்டார்க் காரினி லேறி
    நிமிஷத்திற் செல்குவ மாதே   வான்
காள முகினிகர் வேழமெ னத்தொனி
    காட்டும் பயமடை யாதே   புயற்
காற்றின் விரைவினு மேற்றமா மாங்கலி
    கால வதிசய மீதே   புவி
ஆள வருமணி கட்டி யருண்மா
பாகு மிபுருகிம் ஸாகிபு யோகனெந்
நாளும் வளருஞ்ஜெ னெட்டு ஹவுஸிதன்
    நலமிக்கந   வசீதப்பிர
    பலசித்திர   வகையுற்றுணர்   (கண்மணி)

9. மானினி பேநமை யாளுந் துரைசிங்க
    மன்னவன் பங்களாத் தோட்டம்   இந்த
மாளிகை போலுல கேழினுங் காண
    வராதிது மிக்கசி ரேஷ்டம்   இங்கு
தேனினு மின்பஞ் சிறந்த கனிகள்
    திரண்ட மரங்களின் கூட்டம்   இன்னம்
செண்பக மல்லிகை குங்கும முல்லை
    செவந்தி மலர்கள்ய தேஷ்டம்   பல
மீனின வோடிய நீர்நிலை யெங்கணு
மேவியு தாமரை காவிய மேகமே
நானினி யென்சொலு வேனித னற்புதம்
    நவிலற்கரி   தெழில்பெற்றிரு
    குவிபொற்றன   மலையொத்துயர்   (கண்மணி)

10. ஆலுந் திருவிடை யாபுர முங்கடந்
தாறிணி யூருணி பாராய் இதோ
ஆரிய மேவுகு மாரக்கு றிச்சி
யடுத்தகண் மாயிது தோராய் இனி
நீல விழியெடோல் கேட்டெ னேயமு
னேஸ்வர மாநகர் பாராய் உயர்
நித்தில ராசி கொழித்திடும் வைகையை
நீகடந் துன்னியே வாராய் இந்தத்
தாலம் புகழும் பதிபார மக்குடி
சாருந் தெருவலங் காரம் பலகண்டு
காலே ரெயில்வரும் நேரமிஸ் டேஷனிற்
கடுகிச்செல மனநட்பொடு
நடவிக்கூணம் விடுதிப்புறம் (கண்மணி)

11. மண்டல மெங்கு மதிர்ந்தசைந் தாடவே
வந்ததி தோரெயில் மானே சண்ட
மாருதம் போலதி வேகமு டன்செலும்
வன்மையை யென்னசொல் வேனே இது
லண்டனி லேசவுத் திண்டியன் கம்பெனி
ராஜரீ னுகிக்கந் தானே இந்த
காங்டில்வர் தேமுதற் போட்டுப் பெருந்தொகை
லாப மடைகிறார் தானே இதில்
அண்டு முருளோக ளட்டையின் கால்களோ
ஆரவா ரம்பெருங் கோடை யிடிகளோ
விண்டல மெங்கனு மண்டி யனற்புகை
விரியக்கரு முகிலுக்கிணை
நிரிதத்தொடு செலுமித்தனி (கண்மணி)

12. கோத்த ரெயில்களைப் பார்த்திடு வாய்செழுங்
கோதையே யுன்விழி யாலே — மதங்
கொண்ட யலகரி யொன்றன்பின் னொன்றாகக்
கூடிய பாவனை போலே — இதைச்
சேர்த்ததி வேகமா யீர்த்திடு மிஞ்சின்
சிறப்பொடு நிற்குமுன் னாலே — அதைத்
தேர்ந்திரு டிக்கட்டு வாங்கினா மேறினோஞ்
சென்றபஸ் டெக்கிளாஸ் மேலே — இதோ
ஆர்த்த மணியும் பிகிலு முழங்கின
அக்கண மோடியே நற்கமு தக்குடி
யார்த்திப னூரையும் நீத்தோம் விரைவினில்
பனசக்கனி — ரசமொத்துற
பனுவற்செயு — மெனதுத்தம — (கண்மணி)

13. தேனார் பொழில்வளர் மானாமதுரைத்
திருநகர்ஸ் டேஷனி தாமே — இங்குச்
சீக்கிர மாரெயில் நீக்கி வெளியிடைச்
செல்வழி யாலேவந் தோமே — இதோ
தானா யியங்குமோட் டாரினி லேறினந்
தாஷ்டிக மாயினிப் போமே — வழி
தாண்டி வருகையில் நீண்ட பலதெருத்
தாபனங் கண்டனம் நாமே — புகழ்
மானா பரனெனும் வெள்ளையன் செட்டியாம்
வாசவன் கட்டுமிங் லீஷ—ஹைஸ் கூலிது
சீனா முதற்பல சீமைச் சரக்குகள்
செறிவாகிய — கடைவீதியி
னெறியேவரு — குலவசீதள — (கண்மணி)

14. பைங்கிளி யேசோம சுந்தர ராலயப்
பான்மையைப் பார்விழியாலே — இங்குப்
பாருல கோர்புகழ் மாருதி ராஜற்குப்
பட்ட மளித்தார்முற் காலே — செழுந்
திங்களி னேய்தவிர் சந்திர புஷ்கரத்
தீர்த்த மிதற்கெதி ராலே — இதைத்
தேறி வரவைகை மாநதி யின்கரை
சேர்ந்து நடந்தோமப் பாலே — குளிர்
பங்கய மாமுகப் பாவையர் கூடிய
பாட்டையில் முன்சிபுக் கோர்ட்டையுந் தாண்டியே
இங்குள தாலுகாக் கச்சேரி யாமினி
இதைவிட்டினி நடைபெற்றிடு
மதுரச்சுவை தருதுப்பிதழ் (கண்மணி)

15. பாவையே தோணுதக் காள்தங்கை யூருணி
பார்த்திடு வாயிதன் முன்னே — உறை
பாசத்தி னுற்குஷ்ட ரோகத்தைத் தீர்க்குமாஸ்
பத்திரி யாமிது சொன்னேன் — செழுங்
காவிபடர்ந்திடுங் காட்டூர ணித்தடா
கக்கரை வந்தன மின்னே — இங்குக்
கட்டமு தும்பல காரமுந் தின்று
களையுந் தெளிந்தனம் பொன்னே — வழி
மேவிவரச்சுந்த ரன்னடைப் புங்கவின்
மீறிய கண்டணி யோரிகு ளங்கண்மாய்
ஓவிய மானடோல் கேட்டையுங் கண்டுநீ
உசிதத்தொடு நடவித்தனி
திசியிற்கரு வருணக்குழற் (கண்மணி)

16. ஆருஞ் சதுர்வேத மங்கல மென்றே
யருள் வாணி யன்குடி யூரே புவி
ஆண்டகை மருது பாண்டியன் கோவில்
அலங்காரங் கண்டுநீ தேரே நீர்
வாரு மடந்தையர் போதுகொய் தாடும்
வடுகன் குளமிது நேரே சுப
மங்களஞ் சேர்சிவ கங்கை நகரின்
வனப்புகள் தோணுது பாரே தங்க
மேரு மலையென வீடுக ளுக்கெதிரு
வீதிக ளும்பல சாதிகளும்பெருஞ்
சீருஞ் சிறப்புஞ் செழித்துயர்ந் தோங்கியே
திகழிப்பதி யுலகுக்கொரு
மகுடத்திணை யெனவொப்புவம் (கண்மணி)

திருநகர்ச் சிறப்பு

பொன்னுலவு சென்னிகுள நன்னகராண்ணாமலை தன்
என்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.

1. மங்களவ ளிங்கெளங்கும் பொங்குசிவ கங்கையெனு
மாகர லங்கிர்தங்கள் டம்பமே தேவர்
கோனகரம் போலுமிந்த விம்பமே எழில்
மாடமாமணி மேடைமாளிகை
கூடகோபுர நீடுமாமுடி
மங்குனின்று லாவுசெம்பொற் கும்பமே
திங்களுற வாடுங்கொடிஸ் தம்பமே

2. இங்கிதமொ டுங்குலவி மங்கையர்கள் பந்தடி
இடங்களும் கழங்குபயில் சோலையும் — மா
நடங்களா டரங்கமணிச் சாலையும் — இன்னம்
எதிலார்பல — சாதிமானிடர்
தீதிலா துண — வீதிவீதிகள்
எங்கணும டங்களுமெக் காலையும் — ருசி
பொங்கவள ருங்கரும்பி னாலையும்

3. வேதியர்கள் வீதிகளும் ஓதியாக சாலைகளும்
மேவிடுந்தே வாலயமுந் தோணுமே — பல
பூவுறுநந் தாவனமுங் காணுமே — பெரும்
வேலைநேர்பல — நூலையோதிடும்
வாலையாதி — சாலைமீதினில்
மேதையரைக் கண்டுசேட னுணுமே — அஞ்சிப்
பாதலத்த டங்கநெஞ்சம் பூணுமே

4. சாதிபதி யாமரசர் வீதியுந் தனவணிகர்
தங்கிவள ருந்தெருக்கள் கோடியே — தேவ
கங்கைகுல மன்றமிக்க மோடியே — இந்தத்
தாலமெண்டிசை — யோவிடுங்கடல்
போலதிர்ந்துவி — சாலமிஞ்சிய
சம்பனச வுந்தரவங் காடியே — கொளு
கொம்பெனவி சைந்திடுமென் சேடியே

முற்சிந்து (தொடர்ச்சி)

17. தேவியே நாம்வழி மீது நடந்தினிச்
செல்வோந் திருநகர் வீதி — வெகு
சித்திர மேவுமாஸ் பத்திரி யீதோ
தெரிந்தன மிக்குவி யாதி — யது

ஆவிய விக்கும வுஷதபாகம்

அருந்துவர் பற்பல ஜாதி — இதில்

ஆக்கு நடத்திடும் டாக்டர்கள் பிர்மன்

அவதரிப் பேபுவி மீதில் — இந்தப்

பூவின் முதன்மை பொருந்தி யாசு

புரியகி லாண்டேஸ் வரிமஹா ராணிதன்

ஜீவித காலமி யற்றிய சத்திரந்

திரிபத்திரு — தருமக்கொடை

அருளுற்றிடு — மிகுசத்தியம் (கண்மணி)

18. பாரிட மீதா சாளுந் துரைசிங்கப்

பார்த்திப னாதரங் கொண்டு — திகழ்

பத்துகோன் புச்சாவ டித்தலந் தன்னிற்

பாவு மதிசயங் கண்டு. — இனி

நேரினி லேவரா தீனனு மார்க்க

நெறிமுசு லீங்கடி யண்டு — வளர்

நீண்ட பலதெருக் காண்டொடு மங்குவெண்

ணித்தில மாடங்க ளுண்டு — உயர்

கூரிய கோபுரங் கொண்டகி ரிஸ்டியன்

கோவிலைப் பார்வெகு சோபித மாகுமே

காரிபி தோபள்ளி வாசலுந் தோணுது

நகர்வாழ்வுறு — முசல்மானிறை

புகழ்கூறியே — தொழுவாரிவண் (கண்மணி)

19. கஞ்ச மலர்முக ரஞ்சித மேவிவ

கங்கைக் கடைத்தெருப் பாகம் — இங்குக்

காடு மலைகடல் நாடு நகர்படுங்

காட்சிப் பொருள்களனே கம் — புகழ்

மிஞ்சமெ ரிக்கன்பி ரஞ்சிங்கி லாண்டில்
விளையுஞ் சரக்கதி யோகம் இதில்
விற்பன கொள்வன வர்த்தகஞ் செய்யும்
விமரிசை யோநாக ரீகம் இனி
மஞ்சடை யுஞ்சிக ரஞ்சுடர் வீசிய
மன்ன னரமனை முன்னிலை தோணுது
நெஞ்ச மகிழ்வுட னீவரு வாயிதை
நிகருற்றது புவனத்திலை
நகருக்கொரு திலதப்பணி (கண்மணி)

அரமனைச் சிறப்பு

மகமதியர் குலத்தில் மாணிக்கமாயுதித்த
என்ற வர்ணமெட்டு.

1. மாதர்க் கரசி யேயென் காதற் கனியே ராஜன்
வாசம் புரியு மாடமாம் மனைகட்கொளி
வீசு மணிக்கி ரீடமாம்

2. சீதச் சந்திரன் முடி மீதிற் றவழ்ந்து நிதந்
தேக மெலிந்து வாடுவான் தினகரனோர்
பாக மொதுங்கி யோடுவான்

3. முத்து மரகதத்தாற் சித்திர வேலை செய்த
முன்றூகப் பெல்லாஞ் சொன்னமாம் முடுகிப்பார்க்கின்
நன்மதிப் புள்ள வன்னமாம்

4. அத்திரி போல நான்கு சுற்று மதிளு மோங்கி
அம்பரந் தன்னை யெட்டுமாம் அதன்கொத்தளம்
உம்ப ருலகை முட்டுமாம்

5. ஆணிப் பொன்னை யுருக்கி மாணிக்கம் வைத்தி ழைத்த
அலங்கிர்த வாச னிலையாம் மணிக்கதவம்
இலங்கு மிதற்கி டிலையாம்

6. பாணிக் கடல்க ளேழும் நாணித் தொனிய டங்கப்
படுத்தி யிடியின் றகவாம் முரசமூன்றும்
இடித்திடு மேடை மிகவாம்

7. சிற்பநூற் படிமயன் கற்பனை யாய மைத்த
சித்ரக் கொலுவின் மாடமாம் நடுவிலொரு
ரத்ன மணிப்பொன் பீடமாம்

8. சொற்பெருங் கவி பாடும் விற்பனர் வந்தி ருக்கத்
தொகுத்த நிலய மிதுவாம் இதற்கிணையாய்
மகுத்துவ முள்ள தெதுவாம்

9. மானிய மடந் தேவஸ் தானம் ஜமீனி லுள்ள
வரவு செலவு வேலையாம் அதைவகிப்போர்
பரவுமுத் யோக சாலையாம்

10. தானியக் களஞ் சிய மாநிதிக் களஞ் சியம்
தனித்தனி யாயி ருக்குமாம் நிர்வாகஞ்சுத்த
மனத்தரி னுண டக்குமாம்

11. செந்திரு மர்து வளர் அந்தப் புரமுடனே
சேடியர் வாழுமிடமாம் அவர்கள்புன
லாடிக் குளிக்குந் தடமாம்

12. தந்தருள் மனோ விர்த்தி மந்திர முக்கி ராண
சாலை சமையற் புரையாம் உண-வருந்தும்
மாலு மிருந்த நிலையாம்

13. மஞ்சிகல் மதம் பொழி குஞ்சரம் பஞ்ச கதி
வாசி நிறுத்தும் பந்தியாம் ரதங்கள்தோறும்
வீசுஞ் செயசயந்தியாம்

14. வெஞ்சிலை குந்த மேந்தி நெஞ்சக மஞ்சிடாத
வீரர் வளரும் பாடியாம் சுற்றிலேயகாவற்
காரருறையு மாடியாம்

15. காளிகா ரணி சூலி யாளிவாகனி நீலி
கௌரியம் பிகை சத்தியாம் வளருங்கோவிற்
சௌரியம் பாரு யர்த்தியாம்

16. மாளிகை பல வும்புத் தேளிருலக மன்னன்
வசந்த மண்டபம் போலுமாம் ஜெயக்கொடிகள்
அசைந் தொசிந் தாடு மேலுமாம்

ழுற்சிந்து (தொடர்ச்சி)

20. ராஜாதி ராஜர்கள் பூஜிதஞ் செய்மஹா
ராஜ ஸாமனை யீதே வெளி
கந்தா வனந்திருச் செந்தா மரைத்தடம்
கண்ணுணர்ந் துட்புகும் பாதை சென்று
தேசாதி தேசவி சாரணை செய்து
திகழுஞ்சிம் மாசன மீதே துரை
சிங்க மதிபதி யெங்கணுஞ் செங்கோல்
செலுத்துவ தைக்கண்டோ மாதே மனு
ஆசார நீதி யறிவறம் புண்ணியம்
ஆகம வேதபு ராணமெ லாங்கற்று
வாசாம கோசர மாயுப தேசிக்கும்
வள்ளற்கிணை சொல்லப்புகில்
உள்ளத்திலை தெள்ளத்தெளி (கண்மணி)

திருக்கொலுச் சிறப்பு

தெள்ளுதமிழுக்குதவு சீலன்

என்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.

1. காசினியை யாளுமஹா ராஜன் தேவ
கற்பகத்தின் மிக்கக்கொடைப் போஜன் சிவ
கங்கைநகர் வாழுந்துரை
சிங்கமண்ட லேசுரப்ர காசன், விசு வாசன்

2. தேசிக ரடிபரவும் லோலன் அஷ்ட
திக்கரசர் மெச்சியபூ பாலன் துரை
சிக்கமென வந்துதித்த
மங்களகல் யாணகுண சீலன், அநு கூலன்

3. புண்ணியநன் னீதிதவ றாதே மணிப்
பொன்னொளிர்சிம் மாதனத்தின் மீதே ஜெயம்
பொங்கும்வர துங்கதுரைச்
சிங்கக்கொலுத் தங்கினனிப் போதே, மடமாதே

4. பண்ணியற் புலவர்கள்கொண் டாடி வேத
பாரகர்க ளோடொருங்கு கூடி ஞாலம்
பாநுபுரிந் தாளரசன்
மீதுசுப சோபனங்கள் பாடி, நிற்பர் கோடி

5. நித்திமத்த ளத்தினா வாரம் வரு
ஒத்திடவே வீணையின்சா ரீரம் கொண்டு
தேர்ந்துநட னம்புரியும்
வார்த்தகுழன் மாதரினெய் யாரம், அலங்காரம்

6. சத்தியச் சபதம்நிறை வேற பொய்ச்
சாதனையெல்லாமழிந்து மாற இந்தத்
தாரணியு தித்தவில
காரனென்று கட்டியங்கள் கூறப், புகழ் மீற

7. சந்திரவட் டக்கவிகை நீட வெண்
சாமரையொ டிங்கவரி போட கொடி
சங்குமயிற் பீலிகுஞ்சம்
அமைகைபிடித் தோரணம் மாட, ஜெயம் பாட

8. மந்திரப்பொன் வாளிலங்கத் தானே கொலு
வந்தமர்ந்தா னிந்த்ரகுலக் கோனே இந்த
மாசபையில் வீற்றிருக்கும்
ராஜரிகர் பேரை மட மானே, புகல் வேனே

9. மாட்சிமை வளருமதி யோகன் முன்
வரும்பொரு ளுரைக்குமதி யூகன் விறன்
மந்திரிபி லிப்புராஜ
தந்திரி புவிசுமர்ந்த வாகன், மண்ட லீகன்

10. ஆட்சிமுறை தேறுமநு போகன் நீதி
ஆகமநன் னூலுணர்வி வேகன் எங்கள்
அண்ணலரம்பி லிப்புதுரை
தண்ணளிமி குத்திடுந்தி யாகன் ப்ரபுடகன்

11. பைந்தமிழ்க் குதவுகொடைக் கன்னன் ஏசு
பாதமலர் கண்டபிர சன்னன் எங்கள்
பார்த்திபன்பி லிப்புதுரை
கீர்த்தியி லுயரியசம் பன்னன், மதிமன்னன்

12. சந்தத மருக்கலைவி னோதன் சமஸ்
தானமா சாளும்பிரத் யாதன் மிகு
தாஷ்டிகமு றுங்கலெக்டர்
வாட்ஸனென வந்தபிர சாதன் நெறி நீதன்

13. திங்கள்வத னந்திகழு மானன் இரு
செல்வமும் படைத்திடுங்கு பேரன் மிகு
சேமமுறும் வாழ்வுடைய
ஊட்னெனப் பேர்வகித்த தீரன் மலர்த் தாரன்

14. துங்கமா மறையுணரு பாயன் துயர்
சொல்லிவரு வோர்க்கருள்ச காயன் ஞான
சூரிய னிகருமதி
காரியாங்கி ளாஸன்டனத் தூயன், சம்ப்ர தாயன்

15. நாகரிக வாலிபர் களாட்டம் என
நாடொறும்புட் பாலடிக்குங் கூட்டம் மஹ
ராஜனிய மித்திடுங்கா
லீஸ்வரக்கி ளப்பினரி னாட்டம், மாசி ரேஷ்டம்

16. சாகசம்பொ ருந்தியசல் லாபன் பெயர்
சாற்றுகின்ற பூஷணசொ ரூபன் என்றும்
சாசுவதக் காப்டனுங்கா
லீசுரக்கி ளப்பின்பிர தாபன் பத்ம நாபன்

17. பூவையர் மடலெழுதங் காமன் வளம்
பொங்கியபு தூர்வளரும் நேமன் லண்டன்
போர்துயர்பா ரிஸ்டர் வேலை
தேர்ந்திடு முகம்மதலி பூமன், சுப க்ஷேமன்

18\. நாவலர்கள் மெச்சுயிர சங்கன் புகழ்
நாட்டிய ஹவுத்துவர துங்கன் இக்கி
லாண்டி விஞ்சி வீர்விருது
பூண்டிவணு றைந்தவகளங்கன் ஜெயசிங்கன்

19\. நல்வளஞ் செறியிளசை வாசன் எந்த
நாளினும் நமக்கினிய நேசன் மது
ராபுரியில் வாழுமுனி
சீபவிஞ்சி வீர்ஹவுத்து ராஜன், கொடைப்போஜன்

20\. செல்வமுறு மன்னர்பலர் கூடி நிதஞ்
சிந்தையின் மகிழ்ந்துபுகழ் பாடி இதோ
சீரியர் பாவியதர்
பாகினிவி ருப்பதைப்பார் சேடி, வெகு மோடி

முற்சிந்து (தொடர்ச்சி)

21\. தாலமெல் லாமரசாளுந் துரைசிங்கச்
சக்கர வர்த்தியைப்போற்றி ராஜ
தந்திரி யாமதி மந்திரி யாய்பிர
தானிபி விப்பையுமேற்றி எந்தன்
வால வயதுடை யாளே யவர்மிசை
வாழ்த்திய நூலையாஞ் சாற்றி வெகு
மான மெனத்தருந் தான மடைந்து
மனத்துயர் பாவையுமாற்றி நல்ல
சீலமுங் கல்வியுந் தேறு மறிவுடன்
செல்வ முதலிய பல்வள முற்றுநாம்
கால காலமுங் களிப்பொடு வாழ்கவே
காதலாயினி வாழியாலிகை
ஓதலாமிசை யாகவேயிரு (கண்மணி)

நூல் வாழிமாலிகை.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

1. பார்படைத்த வளமனைத்தும் பரவுதழுங் தாபுரியம்
பதியாள் கோவே
கார்படைத்த கற்பகம்போற் கவிவாணர் கட்குதவுங்
கருணை வள்ளால்
ஆர்படைத்த ரிவ்வுலகி னீபடைத்த பெரும்புகழ்போ
லறிஞ ரேத்தும்
ஏர்படைத்த மதியுடையா யெங்கள்துரைச் சிங்கமன்னா
இனிது வாழி

2. புத்தமுத மொழிமடவார் சித்தமிசை மடலெழுதிப்
புகழ்சொ ரூபா
மைத்தவழுங் கிரிப்புயத்தில் வையகமே ழும்பரித்த
மண்ட லீகா
முத்தமிழ்ச்ச முத்திரம டுத்துமழைக் கவிபொழியு
முகிலே நாளுஞ்
சத்தியமே விரதமெனத் தரித்ததுரைச் சிங்கமன்னா
தழைத்து வாழி

3. தண்ணிலவு பொழிதாளத் தனிக்கவிகை நிழற்றவருஞ்
சார்வ பூமா
பண்ணிலவு மதுகரங்க ணறவருந்து முல்லைமலர்ப்
பைந்தார் வாகா

விண்ணிலவு கருடவிலோ தனமனும கேதனமார்
வெற்றி வேந்தே
கண்ணிலவு மணியெனயாங் கருணாதுரைச் சிங்கமன்னா
களித்து வாழி

4. தேனிருக்கும் பூப்பொழில்சூழ் தென்குழந்தா புரிவளருந்
தேவியான
மானிருக்குஞ் செழுங்கரத்தான் மருங்கிருக்குங் கௌரியம்
வரத்தாற் றேவர் [மன்
கோனிருக்கும் பதிவரைக்குங் குலவுபுகழ் படைத்துவளர்
ஸ்ரீசி லேமை
வானிருக்குங் கரதலமார் வண்மைதுரைச் சிங்கமன்னா
வாழி வாழி.

5. படைகுடிகூழ் மந்திரிநட் பரணாறு முடையதரா
பதிகளேறே
கொடையளிசெங் கோல்வளருங் குடியோம்ப லுடையரச
குலநற் றீயா [சர்
அடையலரின் முடிகள்பொடி படநடனம் புரிசமலத்
தமர்ந்த தெவ்வான்
மிடையரசர் குடிகெடப்போர் விளைத்ததுரைச் சிங்கமன்
மேன்மேல் வாழி [னா

6. வடங்கிடந்த சிமிழ்முலையார் மயல்கிடந்த மாலைபணி
மார்பா வெற்றிப்
படங்கிடந்த கடலனைய படைகிடந்த மதிளரணப்
பதியாள் கோனே
விடங்கிடந்த கிரணவடி வேல்கிடந்த தோளுடையாய்
வீரசூரத்

திடங்கிடந்த மனவலியாற் செயமடைந்த துரைச்சிங்கச்
செம்மால் வாழி.

7. மன்னுலகின் முன்னிருந்த வள்ளலெழு மூவர்புகழ்
மறையு மாறும்
பொன்னுலகி லகன்மணியு முயர்சுரபி யுக்கரந்து
புகுது மாறுந்
தன்னுயிர்போன் மன்னுயிரைத் தாபரித்துப் பலதானந்
தழைத்தோய் தர்மம்
என்னுமிறைக் காலயமே எங்கள் துரைச் சிங்கமன்னு
வென்றும் வாழி

8. வில்லிலருச் சுனமகிபா வெற்றியினி லுலகாண்ட
விக்ர மார்க்கா
சொல்லிலரிச் சந்திரனே கல்வியினி லகத்தியனே
துணிந்து செய்யும்
மல்லிலெழிற் புயவீமா வயதினுறு சிரஞ்சீவி
மார்க்கண் டேயா
நல்லியலி னிசைபடைத்த ராஜதுரைச் சிங்கமன்னு
நாளும் வாழி

9. தனதுகுழ னுதல்விழிநுண் ணிடையணைய புயலையிளஞ்
சசியை பாணைக்
கனதியுறு துடியையிரு காஞ்சிரமேற் கொண்டுதவங்
காத்த தேவை
எனதுவல மிருதியென வருள்புரியுங் கௌரிவரத்
தியல்பா லென்றும்
மனதுமகிழ் திருமனைவி மக்களொடுந் துரைச்சிங்க
மன்னு வாழி.

மூற்சிந்து (தொடர்ச்சி)

22. சந்திர னோடு சுணங்களுங் கூடிய
தன்மையா மிச்சபை நாடு வெகு
சங்கையுடன்மிரு தங்கமு ழக்குகைத்
தாள மகிழ்வுடன் போடு நாம்
வந்த வழிநடைச் சிந்துட னேவாழி
மாலிகை யுமிசை யோடு சுப
மங்கள மாயுரைத் திங்கித மாகநீ
மன்னன் ஸமூகங்கொண்டாடு இவன்
சந்தத மோங்கித் தழைத்து வளர்ந்திடத்
தற்பர னைமிது நட்புட னேதுதி
நிந்தனை யாவையும் நீக்கிடு வாய்நெறி
நீதித்திற னோதித்திரு
வேதப்பொருள் போதித்திடும் (கண்மணி)

23. பொன்னெழின் மாதேநீ சொன்னதோர் நூலைப்
பொருந்திச் செவியினில் வாங்கி அதன்
பொற்புயர் கற்பனை யற்புத மூற்ற
பொருளுணர்ந் தேமகிழ் வோங்கி கொடைக்
கன்ன னெனவளர் மன்னன் துரைசிங்கக்
காவலன் சன்மானந் தாங்கி வந்து
காதலு டன்கொடுத் தாதர வோடிக்
கருணை புரிந்தனன் பாங்கி இங்கு
நன்னயஞ் சேர்நம தண்ணல்பி லிப்பெனும்
நன்மதி மந்திரி பொன்மிகத் தந்தனன்
இன்னஞ் சபையி லிருக்குந் துரைகளும்
இதயத்தினில் மகிழ்வுற்றதி
நிதிபொற்பணி யணிவைத்தனர் (கண்மணி)

வழிநடையலங்கார வாழிமாலிகை 25

பாடிப் பரிசுபெற்ற சிறப்பு

சந்தக்கும்மி.

1. நாளுந் திகழுஞ்செங் கோலுடையான் — புவி
யேழுஞ் செயங்கொண்ட வேலுடையான்
நலமேவிய குலவேதியர்
கலைதேறிய புலவோர்தினம்
நாடிப் புகழுஞ்சீர் சாலுடையான்

2. ஆளுஞ் சிவகங்கை மாபதியான் — திரு
வாழுந் துரைசிங்கப் பூபதியான்
அதிமுத்தமிழ் மதுரக்கவி
யதனற்றொடை வதிபொற்புய
மாரவி ருத்துங்க ராபதியான்

3. அன்னவன் கீர்த்தியைக் கொண்டாடித் திருச்
சன்னிதி மீது தமிழ்ப்பாடி
அமராவதி ரமணகுரு
குமாரபுப விமபாசல
ஆண்டகை யென்றுரைத் தோஞ்சேடி

4. கன்னனு ணர்ந்தந லமைவினித்தான் — வள
மன்னுங்கி ராம மினிதளித்தான்
கணையாழிகள் மணிமாலைசு
வணமாநிதி யணியாகவே
காணிக்கை தந்துமன ங்களித்தான்

5. ரத்தினத் தோடா கரத்திலிட்டான் கண்டை
வஸ்திர மோங்கு புயத்திலிட்டான்
நகைராசிகள் மிகவேவகை
வகையாயகி மகிழ்வோடெமை
நாடிக் கொணர்ந்து கழுத்திலிட்டான்

6. சத்திய வான்மந்திரித் தனயனேபுவி
நத்தும்பி லிப்புது ரைத்தனயனே
தனதுக்கென மனதிற்றெளி
விசயத்தொடு கனகப்பொருள்
தாராள மாகக்கொடுத்தனனே

7. சம்பிர தாயம் புரியுமிஸ்டர் பிலிப்
பெம்பெரு மானே பிரைமினிஸ்டர்
சந்தோஷமி குந்தாபர
ணந்துசுப சுந்தரனவை
தந்தா னவனேடிப் டிக்கலெக்டர்

8. கம்பீர மான கவிபாடி வந்து
காணிக்கை பெற்றே மொருகோடி
கனகாசல தனமானினி
தினகாலமு மனமீறிய
காதலாங் வாழிசொல் வோஞ்சேடி.

வாழி கூறல்.

முற்சிந்து (தொடர்ச்சி)

24. திங்கண் முமம் மாரி பொழிந்துல கெங்குஞ்
செழித்து வளர்ந்தென்றும் வாழ்க ஜெய
சிங்க மெனுந்துரை சிங்க திருப்பனுந்
தேவியு மைந்தரும் வாழ்க செல்வம்
பொங்கும்பீ லிப்பெனு மந்திரி வாட்ஸன்
புரபதி ஊமனும் வாழ்க புவி
யோற்றுங்கி ளாஸனுஞ் சாற்றுங்கா லீஸ்வரப்
புட்பால் கிளப்பினர் வாழ்க புகழ்
தங்குமு கம்ம தலியெனு மன்னனுந்
தண்ணரு ளான்ஹவுத் தண்ண லும் வாழ்கவே
மங்கள மாகவே செய்யிதப் துல்காதிர்
வாழிவாழிகவி வாழிவாழிமறை
வாழிவாழிதரு வாழிவாழியவே (கண்மணி)

சம்பூரணம்.

மாணிக்கம் பிரஸ், பரமக்குடி—26.—200